# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூரு] யாழ்ப்பாணம்:- நந்தன வரு சித்திரை மீ கஉ உ வெள்ளிக்கிழமை (25 April 1952) [இல - சு]


அரசியல் அலை

## வேடம் வேறு, விஷயம் வேறு!

### சிங்களந்தான் அரசமொழியாம்!!

### திரு. பண்டாரநாயக கட்சியின் விசுவ ரூபம்!!!

**24 மணித்தியாலங்களில் சிங்களத்தையும் தமிழையும் மொழிகளாக்குவேன் என்று திரு. பண்டாரநாயக கூறினுரல்லவா அது எப்போது? ஐக்கிய முன்னணி ஆக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் போது. இப்போது ஐக்கிய தேசியக் கட்சியை விழுத்த ஐக்கிய முன்னணி நிறவும் முயற்சி முறிந்துவிட்டதே. உள்ளே இருந்ததை வெளியே தெளிவாகக் கூறிவிட்டார். திரு. பண்டாரநாயக.**

நீர்கொழும்பில் தமது கட்சிச் சார்பாக அபேட்சகரை நிறுத்தி அவருக்காகத் தேர்தற் பிரசாரத்தில் என்ன சொன்னுர் என்று ஆங்கில (மாலைத்) தினசரி (Times of Ceylon) குறிப்பிடுகிறது. இது ஐக்கியமுன்னணி(United Front)என்ற அரசியல் அவதந்திரக் கட்சியினர் உள்ளக் கிடக்கைகளைத் தெள்ளிதிற் காட்டுகிறது.

தலைவர் திரு. பண்டாரநாயக சொன்னுராம் 'வன் 24 மணித்தியாலங்கள் வேண்டும் 12 மணித்தியாலங்களில் சிங்களத்தை அரசமொழி ஆக்கிவிடுகிறேன்' என்று.

அவர் கட்சி அபேட்சகர் திரு. C. M. பெர்ளுண்டோ அவ்வளவில் விட்டாரா? 'எங்கள் கட்சியின் கொள்கை சிங்களத்தை அரசமொழியாக்குவதே' என்று அநுபல்லவி எடுத்துப் பாடினுராம்.

#### பசுத்தோல் போர்த்த புலிக் கட்சி!

பசுத்தோல் போர்த்த புலியாகிய திரு. பண்டாரநாயகவின் கட்சியுடன் ஐக்கிய முன்னணிப் பேச்சு நிகழ்த்திய அரசியற கட்சிகளின் நேர்மையும் சாதிமொழி அபிமானமபற்றும் இதிலிருந்து புலனுகின்றது.

ஆகவே திரு. பண்டாரநாயகவின் கட்சி ஒருவடிகட்டின சிங்களக் கட்சியென்றும் சிறுபானமையோருக்குப் பெருந்தீங்கு விளைவிக்கக்கூடிய தன்மையதென்றும் அறிந்தும் விளக்கில் வீழும் விட்டில்போலச் சிறுபான்மையினர் திரு. பண்டாரநாயகவில் இன்னமுமா நம்பிக்கை கொளகிறுர்கள்!

---

## வாக்களித்தலும் மதுபானமும்!

### அபேட்சகர்கள் ஒருங்குசேர்ந்து இதை ஒழிக்கக்கூடாதா?

பாராளுமன்ற அபேட்சகர்களே! வாக்காளர்களே!! பாராளுமன்றத் தேர்தல்கள் வரும்பொழுது பலவேறு காரணங்களால் மக்கள் மதிமயங்கினவர்களாகவே தங்கள் வாக்குச் சீட்டுகளைக் கொடுக்க வேண்டி எப்பொழுதும் நேர்கின்றது. அக்காரணங்களுள்ளே இலகுவாகச் சந்தேகமின்றி எடுத்துக் காட்டக்கூடியதாயிருப்பது மதுபானமாகும். இறைவன் திருவருள வழி உருவெடுத்து, நாடெங்கும் இன்னுரை பொழிந்து வரும் வடஇலங்கை மதுவிலக்குச் சபையார் இப்பேருண்மையை இனிது விளக்கி எம் உள்ளங்களிற் பதித்து வருகின்றனர்.

அன்புள்ள சகோதர சகோதரிகளே, இந்த மதுபானத்தாலே வாக்காளர்கள் வாக்களிக்கும்பொழுது மதியிழந்தவராயே வாக்களிக்க நேரிடுகிறதென்றும், ஆதலினுலே சனநாயக ஆட்சி தன்சிறப்பின்றி உண்மையில் மதுநாயக ஆட்சி ஆகின்றதென்றும், அரசியல் வாதிகளே ஒப்புக்கொள்ளுகின்றனர். இதை யாராயினுமமறுக்க முடியுமா? தமிழ் மக்கள் தங்கள் வாழ்க்கைப் பண்பாட்டை யிழந்ததோடு, கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் முதலிய துறைகளிலும் எக்காலத்திலும நிலைகுலைந்தவராய் வாழவேண்டிய நிலைமையைத் தரும் முறைகளை எடுத்தாளுதல் இனியும் முறையாகுமா?

#### மதி மயங்கிய பின் வாக்கு அளிக்க முடியுமா?

மேலைத்தேச மக்கள் வாழ்க்கையில் புலன்வழிச் சென்று மதியிழந்து வருந்தும் இலெளகிக நெறியே பெரும்பாலும் இடம பெறுகின்றது. கீழைத்தேசத்தவராகிய நாங்களும் இவ்வளவு காலமும் அவர்கள் சென்ற வழியிலேயே சென்று அவர்களைப்போலவே மிருகத்தன்மையுடையாராய் ஒருவரை யொருவர் அழிக்கும், நசிக்கும், வழிவகைகளையே தேடி, அவர்கள் இப்போ நச்சுக்குண்டுக்குத் தப்பும் வழியறியாது தடுமாறுவதுபோல நாமும் தடுமாறவேண்டியவர்களாயினேும். இனியும், இச்சுதந்திர காலத்திலும் அவ்வாறு தடுமாறுவோமா? நிலையான இன்பத்தையே இலக்காகவுடைய எங்கள் சமய போதனைகளை இனியாயினும் எங்கள் வாழ்க்கையில் எடுத்தாளாது தொலைவில்லாத் துன்பத்துக்கு அடிகோலுவோமா?

"நம்பிக்கை யுடையவர்களே மதுபானத்தையுஞ் சூதையுந் தவிர்ப்பீர்களாக. அவை உங்கள் மத்தியில் வெறுப்பையும் விரோதத்தையும் உண்டாக்கிக் கடவுள் வழிபாட்டையும் மறக்கச் செய்யும்.

(இஸ்லாம்: திருகூரான் 5:90-91)

திராட்சரசம் பரிகாசஞ் செய்யும். மதுபானம் அமளி பண்ணும். அதனுல் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல. (கிறிஸ்தவம்: நீதி மொழிகள்: 20:1.)

அறிவை ஒழிக்கின்ற மதுபானஞ் செய்வோர் தமக்குள்ள நிலையிழந்து தாழ்வெய்துதல் திண்ணம். (பௌத்தம்: தர்மபாதம்: 246-247)

உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல்கொண் டொழுகுவார்
(சைவம்: திருக்குறள்)

இவ்வாறு எங்கள் சமய நூல்கள் கூறியிருப்பதைச் சற்றே சிந்தியுங்கள்.

இவ்வாறு கேட்டுச் சிந்தித்த பின்னும் இவற்றுக்கியைய எம் செயல்களை நாம் அமையாவிட்டால் எமக்கு எவ்வித மன்னிப்புமே கிடையாது. ஆகையால் எமக்கெதிரே வரவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் மதுபானம் வழங்கும் வழக்கத்தைப் பாராளுமன்ற அபேட்சகர்கள் தவிர்க்கவேண்டும். மதுபானம் அருந்த விழையும் மன எழுச்சியை வாக்காளர்கள் அடக்கவேண்டும், இந்த நன்னெறியைக் கடைப்பிடித்தொழுகும் அபேட்சகர்களே சுயநலங் கருதாத் தேசத் தொண்டர்களாவர். இத் தொண்டுக்கு உதவியாய - உடன்பாடாய் - நிற்கும் வாக்காளரே எங்கள் சமூகத்தின் இன்ப வாழ்க்கைக்கு அத்திவாரமிட்ட பெருமை யுடையவராவர்.

ஆகையால் அன்புள்ள சகோதர சகோதரிகளே, இந்த நல்வழியைக் கடைப்பிடித்தொழுக நாம யாவரும் ஒருமித்து முயல்வோமாக. எமது முயற்சி இனிது சித்தியெய்துதற்கு இறைவன் திருவருளை வேண்டுவோமாக.

---

உ

## நினைப்பவர் மனம் நீங்கிலான்

திருச்சிற்றம்பலம்

தஞ்ச மென்றுதன் தாள தடைந்த பாலன் மேல்வந்த காலனை யுருள
நெஞ்சிலோருதை கொண்ட பிரானை நினைப்ப வர்மனம் நீக்ககில்லானை
விஞ்சைவானவர் தானவர்கூடிக்கடைந்த வேலையுள் மிக்கெழுந்தெரியும்
நஞ்ச முண்டநள் ளாறனை அமுதை நாயி னேன்மறந் தென்னினைக் கேனே

திருச்சிற்றம்பலம்

---

## வானொலி யந்திரம் வழங்குதல்

இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாகாணத்தின் ஒவ்வொரு பிருவுக்கும் ஒன்பது வானொலி யந்திரம் இந்த ஆண்டு வழங்கப்படுமென்றும், இந்த யந்திரங்கள் தேவைப்படும் கிராமச்சங்கத்தார் மாகாண அதிபர் உதவிமாகாண அதிபர் ஆகியவர்களுடன் ஒழுகு செய்ய வேண்டுமென்றும் உள்நாட்டு அரசாங்கக் காரியாதிகாரி தெரிவிக்கின்றுர்.

#### இந்தியஅரசாங்க உபதலைவர்

பேராசிரியர் சர்வபாளி இராதாகிருஷ்ணன் அவர்கள் ஒருவரே இந்திய அரசாங்க உபதலைவர் பதவிக்கு அபேட்சகராக விண்ணப்பம் செய்திருக்கிறுர்.

ஆகையினுல், அவரே உப தலைவராயினு ரென்பது பெறப்படுகின்றது.

---

திருத்தொண்டர் திருநாள்

## தம்மை மறந்து, சிவனை நினைந்த அடியார்

### அடியார் தொண்டிற் சிறந்த சிறுத்தொண்டர்

சோழமண்டலத்திலே திருச்செங்காட்டங்குடியிலே மாமாத்திரர் குலத்திலே பரஞ்சோதியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மெய்ப்பொருளை அறிய வேண்டுமென்னும் அவாவுடன் வேதம்முதலிய நூல்களைக் கற்றுத் தெளிந்து பரமசிவனே மெய்ப்பொருள் அவருடைய திருவடிகளை அடைதலே முத்தி என்று கண்டு சிவபிரான் திருவடிகளை அல்லும் பகலும் இடைவிடாது அன்போடு தியானிப்பவர். சிவனடியாருக்குத் திருத்தொண்டு செய்பவர், ஆயுள்வேதம் கற்று ஆனை குதிரை ஏற்றம் முதலியவற்றில் வலலுனராயிருந்தார்.

இவர் வாதாவி என்னும் நகரத்துக்குச் சென்று மாறுபட்ட அரசனை யானைப் போரில் வென்று, யானை, குதிரை முதலியவற்றையும் பல நிதிக்குவைகளையுங் கொண்டு வந்தார். இவர் ஒரு சிறந்த சிவனடியார் ஆனமையினுல் இருவருர்குழத்த தாய் நின்று தொண்டாராதலால், வலியுடையார் யாருமில்லை என்ற மந்திரிமார்கூற அரசன் இதை அறியாது இவரைப் போருக்கு விடுத்தேனே என்று துன்புற்று தன் குற்றத்தைப் பொறுத்தருளுமாறு வேண்டினுன். அது தனது தொழிலாகவின அதில் ஒரு குற்றமுமில்லையென்று நாயனுர் கூறினுர். இனி அப்போர்த் தொழிலை விட்டுத் திருத்தொண்டு செய்யும்படி திரவியக் குவியல்களையுங்கொடுத்து விடைகொடுத்தான்.

#### இல்லற வாழ்வு

நாயனுர் கணபதீச்சரப்பெருமானை வணங்கித் திருத்தொண்டு செய்து வாழும்நாளில் திருவெண்காட்டு நங்கையார் என்னும் அம்மையாருடன் இல்லறம் புரிந்து சிவனடியார் தொண்டுசெய்து வந்தார். இவர் நாள்தோறும் சிவனடியாரைத் திருவமுது செய்வித்த பின் தானுண்ணும் வழக்கமுடையார். சிவனடியார் முன் சிறிய சிறுத்தொண்டர் என்னும் பெயர் பெற்றுர். இவருக்குத் திருவருளாலே சீராளதேவர் என்னும் புத்திரர் பிறந்தார். அவர் உரிய காலத்திற் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பெற்றுர்.

இவருடைய அன்பின் பெருக்கைத் திருவுளத்தடைத்து, சிவபிரான் வடதேச வயிரவரூபங் கொண்டு, இவர் வீட்டுக்குவந்தார். அவர் வருகையைக் கண்ட சந்தன நங்கையார் என்னுந் தாதியார் அவரை உள்ளே வரும்படிவேண்ட அவர் மறுத்தார். அது கேட்ட திருவெண்காட்டம்மையார் விரைந்து சென்று சிவனடியாரைக் காணுது தேடிப்பெயர்விட்டார் தலைவர் என்று தெரிவித்து உள்வேழுந்தருளுமாறு வேண்டினுர். சிறுத்தொண்டலரக் காண வந்தோம். கணபதீச்சரத்தில் ஆத்தியின் கீழிருப்போம் அவருக்கு அவ்வாறு தெரிவியுங்கள் என்றருளி ஆத்திமரத்தின்கீழ் எழுந்தருளியிருந்தார் வயிரவர்.


(தொடர்ச்சி 2-ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ௵ சித்திரை ௴ ௧௨ ௨ வெள்ளிக்கிழமை

## அபேட்சகர்கள் அறியவேண்டியன

பாராளுமன்றத்தேர்தல் பாரதப்பெரும் போர்போல ஒரே இனத்தைப் பிளவு செய்து இல்லாதொழிக்கக் கூடிய வேகத்தோடும் வெகுட்சியுடனும் ஆரம்பித்திருப்பதாகக் காணப்படுகிறது. தமிழினம் இருமுகப்போரில் ஈடுபட்டிருக்கின்றது. ஒரு அரங்கில், நிரீச்சுரவாதத்தை அடிப்படையாகக்கொண்ட ஓர் இதரதேச அரசியற்கொள்கை படை எடுத்து நிற்கிறது. மற்றைய முனையில் தமிழ் மக்கள் ஒருவரோடொருவர் வேற்றுமைப்பட்டுச் சர்வசங்காரப்போர் நிகழ்கின்றது. இதன் பலாபலன் எவ்வாறாகும் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

இன்றைய உலகில் யுத்த சன்னத்தர்கள் கையாளும் முறைகளும் உபகரணங்களும் மனித நெறிக்கு முற்றிலும் மாறுபாடானவை என்பதை முடிந்த மகா யுத்தத்தின்போது எல்லோரும் அறிந்ததே! அந்தக் கெடுதற் கொடுமுறைகள் யாவும் தேர்தல்களிலும் உபயோகிக்கப்படுகின்றனவென்றும் அவற்றால் மனித சமுகத்தின் தத்துவமும் இயல்பான குணமுமே குன்றிவிடும் என்றும் அறிஞர்கள் அலமருகின்றனர். இந்த நிலைமைக்குக்காரணர்களாக உள்ளவர்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திற் பேராசை கொண்ட அபேட்சகர்களே. மனிதகுலம் மாண்பு பெற வந்துதித்த மகாத்மா காந்தி அடிகள் வாழ்ந்து முன்மாதிரி காட்டிவந்த பாரத நாட்டிலும் இந் நிலைமை சிறிது உண்டெனினும் அத் தேசத்தில் அண்மையில் நடந்தேறிய பிரமாண்டமான தேர்தலில் அபேட்சகர்கள் வழிகாட்ட வாக்காளர்கள் பெரும்பாலும் ஒழுங்கானமுறையில் ஒழுகினர்கள் என்பதை யாவருமறிவர்.

தமிழினம் நின்று தத்தளிக்கின்றதென்ற கவலை ஒருபுறம், தேர்தல் முடிவடைய முன்னரே சமுகம் அறநெறிக்கு முற்றிலும் மாறான மறக்கொள்கைகளையும் கபட சூழ்ச்சிகளையும் பழகிப் பிற்கால வாழ்க்கைக்குப் பேராபத்தை விளைவிக்கப்போகின்றதே என்ற சஞ்சலம் இன்னொருபுறமாக, இது தமிழ் நாட்டிற்கு ஒரு சோதனைக் காலமாயிருக்கின்றது. ஆகவே அபேட்சகர்கள் உண்மையாகச் சுயநல நோக்கில்லாது தேசாபிமான உணர்ச்சியினால் உந்தப்படுவார்களேயானால் தாங்கள் தகைமைசால் வழி காட்டிகளாக ஒழுகி, தேர்தல் முடிவு எவ்வாறாயினும், கையாளப்படும்முறைகள் தமிழ்ச் சமுகத்தை அடிப்படையான அறநெறியைக் காப்பாற்றக்கூடியதாகத் தங்களை ஆதரிப்போர்களுக்கு ஒழுக்கமுறைக் கட்டுப்பாட்டை விதித்தல் பெரிதும் வேண்டப்படுகின்றது.

ஒரு யுத்தத்திலே நச்சுப்புகை, கிருமி, அணுக்குண்டு முதலிய பயங்கரமான ஆயுதங்கள் கையாளப்படுதல் போன்று பொய்ப்பிரசாரம், மது, கைலஞ்சம், பலாத்காரம் வசை என்றவகையில் உள்ள பலவேறு ஈன முறைகள் தேர்தலிலே மிகவும் சாதாரணமாக உபயோகிக்கப் படுகின்றன. வாக்காளர்கள் பல அபேட்சகர்களுள் ஒருவரைத் தெரிந்துகொள்வதற்கு அவர்களின் கொள்கைகள் யாவை, இதுவரை நாட்டிற்கு என்ன பணி செய்திருக்கின்றார்கள், வருங் காலத்தில் எவ்வித தொண்டு ஆற்றப்போகின்றார்கள் என்று நன்றாக அறியாதுவிட்டால் அவர்கள் வாக்குரிமையைச் செவ்வனே உபயோகிக்க மாட்டார்கள். ஆகவே அபேட்சகர்கள் இந்த விபரங்களை எல்லாம் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்க வேண்டியதோடு ஆதரவளிக்கும் அன்பர்களுக்கெல்லாம் செய்ய வேண்டியன எவை, விலக்கப்பட வேண்டியன யாவை என்பதை அழுத்தம் திருத்தமாக அறிவித்தல் அத்தியாவசியமாகின்றது. தேர்தல் வருவதும் போவதுமானதன்மையது. தேர்தற்கால ஒழுக்கீனங்கள், நாவினாற் சுட்ட வடுக்கள் என்றும் நின்று தீமை புரியுந் தன்மைய என்ற உண்மையை அறிந்து உணர்ந்து ஆவன செய்யவேண்டிய கடமை பிரதானமாக அபேட்சகர்கள் பாலே உளது.

## கிள்ளான் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவில்

கிள்ளான் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் தர்மகர்த்தாக்கள் கோயிற் பரிபாலனத்தை ஆர்வத்துடன் முறையாக நடத்துவதுமன்றி, குருபூசை, சமயப்பிரசாரம், முதலியனவும செய்து வித்தியாசாலையும் ஒன்று நடத்துதல் அவர்களுடைய 1951-ம் ஆண்டு அறிக்கையால் அறியவருகிறது. இந்த நன் முயற்சிகள் இனிது ஓங்கிவளர இறைவன் திருவருள்புரிவாராக.

## தம்மை மறந்து சிவனை நினைந்த அடியார்

1-ம் பக்கத்தொடர்ச்சி

### உவந்து உண்வு அடியார் வேண்டல்

சிவனடியாரைக் காணாது திரும்பி வந்து வருந்தி மனைவிக்குக் கூற மனைவியார் நடந்ததைச் சொன்னார். அடியேன் உய்ந்தேன் என்று கூறி நாயனார், வயிரவரையடைந்து வணங்கினார். வணங்கித் திருவமுதுசெய்யுமாறு வேண்டினார். அதற்கு வயிரவர், நாம் வடதேசத்துள்ளேம். எமக்கு உம்மால் உணவூட்ட முடியாது என்றார். அடியார் வேண்டிய பொழுது வலாதது ஒன்றில்லையென்றார் நாயனார். நாம் ஆறுமாசத்துக்கொருமுறை பசுவொன்றுகொன்றுண்போம் அஃதும் நரபசுவாகும். அஃதும் ஐந்தாட்டைப்பருவத்தில் ஒரு குடிக்கு ஒரு மகனாய், உடலில் ஒரு மறுவுமின்றித் தாய் பிடிக்கத் தந்தை அரிந்து மனமுவந்து சமைத்த கறி உண்போம் என்றார்.

நாயனார் அதற்கும் உடன்பட்டு வீட்டுக்குப்போய் மனைவியாருடன் ஆலோசித்துத் தங்கள் அருமைப் புதல்வரையே அறுத்துக் கறி சமைத்து வயிரவரை வீட்டுக்கு வரவழைத்துத் திருவடிகளை விளக்கித் தூப தீபங்கொண்டு பூசனை புரிந்து திருவமுதுங் கறிவகையும் படைத்தார்கள். நரபசுவின் உறுப்புக்கள் எல்லாம் சமைத்தீரோ என்று வயிரவர் வினவத் திருவமுதுக்குத் தலை ஆகாதெனக் கழித்தோம் என்றார் திருவெண்காட்டுமையார். அதுவும் நாம் உண்பது என்றார் வயிரவர். சிறுத்தொண்டரும் மனைவியாருங் கலக்கமுற்று நிற்ப, நான் அதைச் சமைத்தேனென்று சொல்லிச் சந்தன நங்கையார் கொடுத்தார். அதை வாங்கி முகமலர்ந்து படைக்கச் சிறுத்தொண்டரை நோக்கிச் சிவனடியாரொருவரைக் கொண்டுவரும்படி கூறினார் வயிரவர். அடியாரொருவரையுங் காணாது வருந்தி நின்று, அடியார் திருநீறணிதலைக் கண்டு அடியேனும் அணிபவன் என்று பணிந்து கூறினார் சிறுத்தொண்டர். உம்மைப்போலத் திருநீறணிந்தாருமுளரோவென்று சொல்லித் தம்முடன் வைத்துண்ண இசைந்தார்.

### இறந்த மைந்தன் எழுந்தமை

ஆயினும் அவர்களுடைய மைந்தனையும் அழைக்கும்படி அதன்பின் கூறினார். அவன் இப்போ உதவான் என்று சொல்ல, அவன் வந்தாலன்றி உண்ணேம் என்றார். சிறுத்தொண்டரும் மனைவியாரும் "மைந்தா வருவாய் செய்ய மணியே சீராளா வாராய்" என்றின்ன சொல்லி யழைத்தார்கள்.

வையம் நிகழுஞ் சிறுத்தொண்டர்
"மைந்தா! வருவாய்' என
அழைத்தார்,
தையலாருந் தலைவர் பணி
தலைநிற் பார்ஆய்த்,
தாம் அழைப்பார்;
'செய்ய மணியே! சீராளா!
வாராய் சிவனார் அடியார்யாம்
உய்யும் வகையால்
உடனுண்ண அழைக்கின்றார்'
எனஓலமிட

பரமசிவனது திருவருளாலே பள்ளிக்கூடத்திலிருந்து வருவான் போற் சீராளன் வந்தான். அவனைக் கொண்டு வயிரவர்பால்வருதலும் வயிரவர் மறைந்தருளினார், சிறுத்தொண்டரும் மனைவியாரும் வயிரவரைக்காணாது மனம்நொந்து நிற்ப சிவபிரான இடபாரூடராய் ஆகாயத்தில் உமாதேவியாரோடும் சுப்பிரமணியப் பெருமானோடும் எழுந்தருளிக் கிருபா நோக்கஞ் செய்து காட்சிகொடுத்தருளிச் சிறுத்தொண்டரை அவருடைய மனைவி, மகன், தாதி ஆகியோருடன், தமது செந்தாமரைத் தருவடியின்கீழ் என்று மிருந்து இறைஞ்சி இறவாப் பேரின்ப வாழ்வு பெறுமாறு கொண்டுசென்றருளினார்.

கொன்றை வேணியர் தாமும்
பாகங் கொண்ட
குலக் கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தருந்
தம் விரைப்பூங் கமலச்
சேவடிக் கீழ்,
நின்ற தொண்டர் மனைவியார்
நீடு மகனார் தாதியார்,
என்றும் பிரியா தேஇறைஞ்சி
இருக்க உடன்கொண் டேகினார்.

சிறுத்தொண்டநாயனார் மெய்ப்பொருளை அறியவேண்டுமென்னும் பேரவாவுடனேயே வேதம் முதலிய நூல்களைக் கற்றதும், கற்றுப் பரமசிவனே மெய்ப்பொருள், அவருடைய திருவடிகளை அடைதலே முத்தி என்று தெளிந்து, தெளிந்தபடி திருவடிக்கன்பூண்டு திருவடித்தொண்டும் சிவனடியார் தொண்டுமே தம் உயிர்வாழ்க்கையின் உறுதொழிலாகக் கொண்டு வாழ்ந்த பேறாக அவர் தம் பசுகரணங்கள் சிவகரணங்களாக மாறி அகிலத் திலறியா அருஞ் செயல் செய்து அானடி அடைந்தமை இங்கே உற்று நோக்கவேண்டியது.

## விளானை இளைஞர்சங்கம்

விளானை (காரைநகர்)யில் சென்ற ஞாயிற்றுக் கிழமை (20 - 4 - 52) ஓர் இளைஞர் சங்கம் அமைக்கப் பெற்றது. இச் சங்கத்தின் நோக்கம் ஒரு வாசிகசாலை அமைத்தலும் அதன்மூலம் தமிழ் வசவம் ஆகியவற்றை வளர்த்தலுமாகும்,

திருவாளர்கள் கா. பொ. முத்துக்குமாரசாமி கா. க. சிவஞானசுந்தரம், க. போம்பலம், சி. இராசரத்தினம் ஆகியோர் முறையே தலைவர், காரியதரிசி, தனாதிகாரி, உபதலைவர் பதவிகளுக்குத் தெரியப்பெற்றனர்.

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.

எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 27—4—52——3—5—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

முக்கியமான பணக்கொடுக்கல் வாங்கலை இவ்வாரத்திலே தடுத்து வைத்தல் நன்று. மன நிம்மதி இராது, குடும்பத் தொல்லைகள் ஏற்படக்கூடும். வார இறுதியில் விசேஷசம்பவ அறிவித்தல் கிடைக்கக்கூடும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

வீண் விஷயங்களில் விரயஞ் செய்ய நேரிடும். குடும்பத்தின் நிலைமையும் திருப்தியளிக்காது. மறைமுகமாகச் சில தொல்லைகள் ஏற்படக்கூடும், ஆனால் அவை பாதகஞ் செய்யமாட்டா.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

உத்தியோக முறையிற் சில சச்சரவுகள் உண்டெனினும் கிழமை முழுவதும் நன்மையாக விருக்கும்; செவ்வாய்க் கிழமைக்குப் பின் குடும்ப விஷயங்கள் சீரடையும். எதிர்பாலாரின் உதவி கிடைக்கும். பொதுவாக ஒரு உற்சாகமான காலம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

வீட்டில் நிலைமை சந்தோஷகரமாகாது. நண்பர்களோடு விபரீத விவகாரங்கள் வரும். அதில் முயற்சியிலே பலன் கிடைப்பதரிது. உத்தியோக முறையில் வாக்குவாதத்தைத் தவிர்க்க.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம். 1ம் பாதம்.

திருப்திகரமான வாரம். போட்டியிடுபவர்கள் தோல்வி அடைவர். கீர்த்தி உண்டாகலாம், பண நன்மையும் மன அமைதியும் காணப்படும். விவாகமாகாதவர்களுக்கு மணம் அல்லது மணப்பேச்சு நிகழும்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உத்தியோக மேற்பார்வையாளர் நன்மை சொல்லமாட்டார். மன அமைதியே கிடையாது. மனைவிக்கு அல்லது மக்களுக்குத் தேக நிலை நன்றாயிராது.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

ஞாயிறு திங்கள் காலையும் குடும்ப ஒற்றுமையோ மன நிம்மதியோ இருக்கமாட்டாது. செவ்வாய் தொடக்கம் நன்மைக்கான சடுதி மாற்றம் ஏற்படும். கருமத்தைத் தொடர்ந்து செய்க.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம அநுஷம், கேட்டை.

சொந்த அலுவல்களுக்கு ஞாயிறும் திங்கள் காலையும் சாதகமான காலம். பின்பு புதன் முடியவுள்ள காலம். தொகதரையைக் கொடுக்கக்கூடும். அப்பால் நிலைமை சீரடையலாம்; எனினும் குடும்ப ஒற்றுமை இருக்கமாட்டாது.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

வாரத்தின் முற்பகுதி வியாபார முயற்சிகளுக்கு நல்ல காலம், ஒரு வீரக்குறிக்கும் இடமுண்டு. கவனமாயிராவிட்டால் வியாழன் வெள்ளியும் சனி காலையும் கஷ்டத்துக்குள் விடக்கூடிய காலம். சனி பிற்பகல் திரும்பவும் நல்லகாலமாகின்றது.

**மகரராசி** உத்தராடம் 2,3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

கடைசி நாள் புறநீங்கலாக இந்த வாரம் வியாபாரத் துறைகளுக்கு நல்லகாலம். குடும்ப விஷயங்களும் நல்லாயிருக்கும் உத்தியோகக் காரியங்களில் சித்தி பெறுவதற்கு நண்பரை உபயோகிக்கக்கூடியதாயிருக்கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம.

குடும்பத்தொந்தரவுகளால் மனச்சமாதானம் இழக்கக்கூடும். நண்பரோடு பிழை விளக்கத்துக்குமிடமுண்டு. வார இறுதி நல்ல புதினம் வருதற்குத் தருந்த காலம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

உத்தியோகத் துறையில் மிகநல்ல காலம். குடும்பச் சந்தோஷமும், வாழ்க்கைச் செழிப்பும் நிச்சயம். வார இறுதியில் மேலதிகாரிகள் நன்மதிப்பும் போட்டியில் வெற்றியுமுண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்து உணர்ச்சிக்கு உரமேற்றும் நூல்கள்

## புதுமை உலகம் தோன்றப் புதுமை இலக்கியம்

கால வெள்ளத்தின் வேகத்திலே அள்ளுப்பட்டுக்கவிழ்ந்து சிதைந்திடும் இலக்கியங்கள், மக்கள் மனத்திலே மறுமலர்ச்சிக் கருத்துக்களை நிலைபெறச் செய்யும் ஆற்றலில்லாதவை. புதுமை இலக்கியம் என்று நாம் புகலும்போது காலத்தால் பிந்திய நிலையிலே ஆக்கப்பட்ட நூல்கள் அல்லவென்பதும்—மிக முந்திய காலத்திலே ஆக்கப்பட்டு வலியிழந்த வர்ணனைகளல்லவென்பதும் பலரின் ஆழ்ந்த கருத்தாக மதிக்கப்படுகிறது.

காலப்போக்குடன் சேர்ந்து மக்கள் மனதிலே மங்காத வீரமுண்டாக்கி - உணர்ச்சி வீறுகொடுத்து - மன உணர்ச்சிக்கு உரமேற்றுவதே புதுமை இலக்கியமாகக்கூடியது. அது பழைய காலத்ததாயும் அன்றிப் புதிய காலத்ததாயும் இருக்கலாம். அதனைப்பற்றி ஆராய்வதால் புதுமை இலக்கியம் எங்கு பிறக்கின்றது என்று நாம் கண்டு பிடித்துவிட முடியாது. நமது பண்டைத் தமிழ் நூல்களை ஆராய்ந்து பார்ப்போமானால் அவற்றுட் பல இன்றும் - என்றும் புதுமை இலக்கியங்கள் எனப் போற்றத்தக்க புகழ்வாய்ந்தன.

### காலக் கண்ணாடியின் ஆராய்ச்சி

வள்ளுவர்குறள், கம்பன் கவிதை, இளங்கோ அடிகளின் சிலம்பு தமிழரின் இலக்கிய இதயங்களிலே என்றும் தள்ளமுடியாத இடம் பெற்றுத் திகழ்கின்றன. அறிவாராய்ச்சிபல்கிப் பெருகிப் பரந்து வரும் இந்த நாட்களிலே ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விடயத்தையும் காலக்கண்ணாடியின் உதவிகொண்டு புதிய முறையாலே பார்வையிடுகின்றான். அந்தப் பார்வையாலே தள்ளப்படவேண்டிய - தவிர்க்கப்படவேண்டிய பல இலக்கியங்களும் இறக்தொழிந்து போகின்றன. அவற்றை நாம் தவிர்க்க முடியாது. ஆயிரமாயிரமாண்டுகளாக அருங்கலை வாழ்க்கை வாழ்ந்து வந்த தமிழ் மக்களிடையே இலக்கியம் உன்னத ஸ்தானம் பெற்றிருந்ததென்பதை ஒவ்வொரு சாதியினரும் நன்கறிவர். பரந்த உலகத்திலே மனித நாகரிகத்தின் உயர் நெறியாலே, மங்காப் புகழுடன் வாழ்ந்த - வாழ்ந்து வரும் தமிழ் மக்களிடம் புதுமை இலக்கியங்கள் பல பொலிந்து விளங்குகின்றன. அந்நியராட்சியிலே நாம் - தமிழ் மக்கள் அல்லலுற நேர்ந்தும் இலக்கியச் செல்வத்தை நாம் இழந்துவிடவில்லை. ஒல்லும்வகை முயன்று ஒளிகொடுத்துக் காப்பாற்றி வந்திருக்கிறோம். மிறக.

### வாழ்க்கைக்கு இயைந்த இலக்கியம்

தற்கால வாழ்க்கைக்கியைய இலக்கியம் விளங்கவேண்டுமென்பது பலர் கருத்து. அது ஓரளவுக்கு உண்மையானதுந்தான். அரசியல் பொருளாதாரம் போன்ற பரந்த மனநெறிப் போக்குகளும் காதல், வீரம் முதலான ஆண்மைக்குரிய அருஞ் செயல்களும், நிறைந்து காணப்படும் இலக்கியங்கள் புதுமை இலக்கியங்கள் என்று போற்றப்படத்தக்கன இலக்கியச் சுவை நுகரும் இயல்பினர் யாவரும் 'புதுமை இலக்கியம்'என்ன தன்மையுடையது என வரம்பிட்டுக் கூற முன்வரவில்லை. எனினும் காலப்போக்கு அதனை வரம்பிட்டுக் காப்பாற்றி வருகின்றது. கம்பன் கவிதைகளாலே நாம் காணக்கூடிய உண்மைகள் பலவுள. எனினும் நவரசங்களை அளவு கணக்கின்றிப் பெய்து தன் னிப் பாடியிருக்கும்

அவன் கவிதைகள் சில சமயங்களின் 'கலாரசிகர்' சிலரது 'வசை' மாரிக்கும் உள்ளாகின்றது. புதுமை இலக்கியத்திற்கும் கம்பன் கவிதைக்கும் பலத்த தொடர்புகளிருக்கின்றதை நாம் இன்றும் பிரத்தியட்சமாகக் காண்கின்றோம்! தியாகம், கற்பு முதலான உயர் பண்புகள் காலப்போக்கிற்கும் ஒவ்வொரு புலவனின் வருணனைக்கும் வேறுபடுவனவாயினும் கம்பன் கவிதைகளிலே அவை பிரதிபலிப்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இராமன் பெருங்குணம், இலட்சுமணன் வாஞ்சை, சீதையின் கற்பு, பரதன் பண்பு, இராவணன் கம்பீரம், கும்பகர்ணன் மானம், விபீஷணன் நீதி இவை பற்றிப் பலரும் பலபடப் பேசுவராயினும் அனைவருள்ளத்தையும் அள்ளத்தக்க முறையில் கம்பன் கவிதை எழில்நயம் பெற்றுள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது. புதுமை இலக்கியம் இத்தகைய ஆகர்ஷண (Gravity)சக்தியுடையதாயிருத்தலே இதற்குச்

**பொன். த. நாவேந்தன்**
**வரைவது.**

சான்றுபகருகின்றது. இதுபோலவே புதுமை இலக்கியம் உருவாகப் பழந்தமிழ்க்கவிதைகள் உதவி செய்கின்றன. கம்பன் கவிதைகள் இத்துறையிலே,— இடைக்காலத்தவை என்ற வித்தியாசத்தினால் மிகவும் உயர்ந்தவை. ஆம்! இதுபோலத்தான் இளங்கோவின் இலக்கியமான சிலம்பும், சேரநாட்டுச் செம்மல் இளங்கோ, செந்தமிழ் நாட்டுத் தெரிவையின் கற்பு ஒழுக்கத்தை உலகுக்கு உணர்த்த எழுதிய காவியம்!

### புதுமை மிளிரும் பழைய இலக்கியம்

ஆம்; அவள் ஒரு சாதாரணப் பெண்தான் - கண்ணகி தனவணிகன் ஒருவனின் தவப்புதல்வி - கோவலன் மனைவி. முடிமன்னன் பாண்டியன் அந்த மொய்குழலாளின் கணவனுக்கு முறையற்ற நீதி முடித்தான். வெகுண்டாள் அந்த வீரவனிதை. மன்னவன் மாண்டான். மதுரை எரியுண்டது. கற்பின் பெருமை நிலைத்தது. சிலப்பதிகாரம் ஒரு புதுமை இலக்கியம்! பல்லாண்டுகள் முன்பு படைத்ததேனும் பழமையாகாத அருவிருந்து, ஒழுக்கத்தின் உயர்வினை - கற்பின திண்மையைக் காட்டும் புதுமை இலக்கியம்

இவைமட்டுமா புதுமை இலக்கியங்கள்? இருக்கின்றன இன்னும். ஓங்கு புகழால் உலகளந்தான் ஒரு புலவன். அவனை, அவனது புதுமை இலக்கியத்தை நாம் மறந்துவிட முடியுமா? புரட்சிக்கவிஞன் - புதுமை இலக்கியத் தளபதி பாரதி அவனைப்பற்றிப் பாடியிருக்கிறான். எப்படி?

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு'' என்று, அப்படியிருக்க நாம் அவனை மறந்துவிட முடியுமா? அந்த வள்ளுவன் ஆக்கிய புதுமை இலக்கியம் வளவிய புகழ்சான்றது. தற்கால அரசியல், பொருளாதாரம், காதல், வீரம், தொண்டு முதலான பல துறைகளிலும் உலக மக்கட்குக் காப்பரணாக உள்ளது. உலகமெங்கும் அதை - அந்தப் புதுமை இலக்கியத்தை மக்கள் கருத்தூன்றிப் படிக்கிறார்கள். தமிழர்களாகிய நாம் உலக மக்கட்கு அளித்தாக் புதுமை இலக்கியத்தை அளித்திருக்கிறோம். இதைவிட சிறந்த

# அம்பலவாண நாவலப் பெருந்தகையார்

## சைவப் பணியில் அரிய தொண்டு

இப்பெரியார் வட்டுக்கோட்டை என்னுமூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இளமையிலேயே குருபக்தியும் சைவ சமயப்பற்றும் முன்னவர். இதனை இவர் இயற்றிய நாவலர் சற்குரு மணி மாலை என்னும் பிரபந்தத்தினால் அறியலாம். இவரது குருபக்தியைக் காட்ட இங்கே ஒரு செய்யுள் காட்டுதும்.

"திருவே யருட் செல்வமே
சிவமே சிவ சிற் சுகமே
மருவே மருவின் மலரே மலர்க்
கற்பகவனமே
கருவே யரித்தெமை யாண்டிட
நீயுருக் கண்டனையோ
குருவே யெம்மாறுமுக
நாவலசற் குருமணியே"

என்னும் இவ்வரிய பா சிறந்த அருளின்பம் பயப்பதாகும்.

இப்பெரியார் மட்டுவில் வேற்பிள்ளைப் புலவரிடம் தமிழ் நூல்களையும் நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதரிடம் சமஸ்கிருத நூல்களையும் சுளிபுரம் கனகரத்தின முதலியாரிடம் ஆங்கில நூல்களையும் கற்றுப் பாண்டித்தியமடைந்தனர். வீளவேலிக் குருக்களிடம் சமய, விசேட, நிருவாண தீட்சை பெற்றுச் சிவபூசையும் எழுந்தருளப்பண்ணிக் கொண்டனர். இளமையிலேயே சைவாபிமானம் பூண்ட இப்பெரியார் கிறீஸ்தவபாடசாலைகளில் போய்ப் படிக்கும் சைவப்பிள்ளைகளையெல்லாம் அப்பாடசாலையிற் கற்கவி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

சி. எம். சாமி மருந்துகள் உலகத்தில் பல பாகங்களிலும் விசேஷமாய் இலங்கையிலும் புகழ்பெற்று வருகின்றன.

**இரத்த சுத்தியைத் தருவது!**

**தங்க பஸ்பம்**
வயோதிகரை வாலிபராக்கும் சகல வியாதிகளையும் நீக்கி சரீர சுகத்தையும் இல்லற இன்பத்தையும் தேக புஷ்டியையும் தரும்.
24-நாள் பஸ்பம் விலை ரூ 15-0-0

**மதனமுதம்**
இதில தங்க பஸ்பம் வைத்தும், தனிபாகவும் சாப்பிடலாம். ருசியுள்ளது.
½ சேர் புட்டி 1-க்கு ரூ. 5-0 0

**குரு பஸ்பம்**
க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரானது வேறில்லை. காசம் இளைப்பு, இருமல், தொய்வு, கோழை கட்டி கட்டியாய் விழுதல், இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயினும் குணப்படும். அனுபவமானது.
24-நாள பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 20-0-0

**மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.**

ஏஜண்டுகள்
P. S. சுப்பிரமணியம், கி-ர் 78, மெயின் வீதி, கலகா.
S. பொன்னுசாமிபிள்ளை, செ. 133 தம்பகொடை தெரு, பலாங்கொடை.
இந்தியன் மெடிக்கல் ஸ்டோர்ஸ் கி-ர் 39 மெயின் வீதி ஹட்டன்.
T N. ராமச்சந்திரன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

M. 16. 25 4-52—25-10-52.

# அப்பர் அடிகளின் குருபூசைத் தினம்

பெருமை வேறென்னவிருக்கிறது? தமிழ்நாடு புதுமை இலக்கிய கர்த்தாக்கள் பலரை உதவியிருக்கிறது எமக்கும் - உலகிற்கும். அண்மையில் வாழ்ந்த அமரகவிபாரதி அவர்களில் ஒருவன்.

### விடுதலை இயக்கத்தால் பிறந்த நூல்கள்

சிறைப்பட்டுக்கிடந்த தேசத்தையும் மக்களையும் பார்த்துச் சிந்தை நொந்தான் அக்கவி ஏன், புரட்சி அவன் மனதிலே பொங்கியது கருத்துள்ள கவிதைகளாக-புதுமை இலக்கியங்களாக - புரட்சிப் பாடல்களாகக் கரைபுரண்டோடியது அந்தச் சக்தி. தமிழ்மக்கள் உள்ளத்திலே தேசபக்தி வேரூன்றியது. அதன்பயன் அடிமை விலங்கு ஒடிந்தது. அன்னை பாரததேவி சுதந்திரமடைந்தாள். புதுமை இலக்கியம் அவள் காலடிகளிலே புன்னகை பூத்து நிற்கின்றது. இன்று இந்நிலை வேகமாக மாறி வருகிறது எத்தனையோ புதுமை இலக்கிய கர்த்தாக்கள் தோன்றி வருகிறார்கள் தமிழ்நாட்டிலே.

சிறு கதைகள், கவிதைகள், உரை நடைப் புத்தகங்கள் மூலமாகப் புதுமை இலக்கியம் வளர்ந்து வருகின்றது. வள்ளுவர், கம்பன், இளங்கோ, பாரதி முதலானோர் களால் வளர்க்கப்பட்ட புதுமை இலக்கியம் இன்று பாரதிதாசன், சுத்தானந்தர், தேவி, காமக்கல்லார் முதலிய கவிஞர்களாலும் ... பாரதி, ரா. பி. சேதுப்பிள்ளை போன்ற உரை நடை வல்லுநர்களாலும் வழங்கப்பட்டு வருகின்றது. இவர்களைவிட இன்னும் பல கவிஞர்களும், உரைநடை வல்லுநர்களும், நாசிரியர்களும் தோன்றிக் கொண்டேயிருக்கிறார்கள். இந்தப் புத்துணர்ச்சி - மறுமலர்ச்சிப் புயல் தமிழர்களின் இலக்கிய இதயங்களிலே இன்பத்தேன் சுரக்கச்செய்யும் என்பதிலையமில்லை. அதன் பலனாகத் தமிழ்வளரப் போகின்றது. தமிழர்கள் வாழப்போகின்றார்கள். புதுமை உலகம் தோன்றப்போகின்றது. வாழ்க புதுமை இலக்கியம். வாழ்க தமிழ்!

### மறவன்புலோவில்

மறவன்புலோ சைவமகா சபை ஆதரவில் (20-4-52) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சிதம்பரசித்தி விநாயகர் ஆலயத்தில் ஷை சுவாமிகளின் குருபூசை நடைபெற்றது. பின் 6-30 மணியளவில பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தர் அவர்கள் தலைமையில் தேவாரத்துடன் விழா ஆரம்பமாயது. தலைவரினால் ஷை சுவாமிகளின் சரித்திரம் சொறபொழிவாற்றப் பட்டது. வித்துவான் க. இராமலிங்கம் அவர்கள் ஷை ஆலயத்தின் திருப்பணி, நிர்வாகம் விஷயமாகப் பேசினார்கள். ஆசிரிய மாணவன் திரு. ஆ. கந்தையா அவர்களால் சபையின் சார்பாக நன்றி கூறப்பட்டது. தலைவரின் நிறைவுரைக் குப்பின் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவெய்தியது.

x x x

### தெல்லிப்பழையில்

ஷை விழா (20-4-52)ஞாயிற்றுக்கிழமை மாலை பாலர்ஞானோதயசபை மாணவர்களால், ஸ்ரீ காசிவிநாயகர் ஆலய மண்டபத்தில். சபைத்தலைவர் தலைமையின்கீழ்க் கொண்டாடப்பட்டது. தலைவர் பிரம்மஸ்ரீ டி. சிவகடாக்ஷக்குருக்கள் பேசுகையில் நாவுக்கரசர் ஆலயங்கள்தோறும் தொண்டு செய்வதையே தமது குறிக்கோளாகக் கொண்டவரென்றும், அவர் இந்த உடம்பிலேயுள்ள அவயவங்களெல்லாம் கடவுள் வழிபாட்டிற்கும் கடவுளுக்குத் தொண்டு செய்வதற்குமே கடவுளாற் கொடுக்கப்பட்டதென்றும் குறிப்பிட்டார்.

இவ் விழாவின்போது பல மாணவ மாணவிகள் தேவார உபந்நியாசங்களிற் பங்குபற்றினர். தலைவர் நிறைவுரையுடன் ஐந்தரை மணியளவில் விழா நிறைவெய்தியது.

x x x

### காரைநகரில்

மேற்படி பூசை (23-4-22) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 11 மணியளவில் காரைநகர் மணிவாசகர் திருமடத்தில் சிவனடியார்களாற் கொண்டாடப்பட்டது. அவ்வமையம் சைவத் திருவாளர் செ. கோவிந்தசாமி அவர்கள் அப்பர் சுவாமிகள் வாழ்க்கை வரலாறு பற்றிப் பேசினர். அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

**தேவை**

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையில் சித்திரமும் கைத்தொழிலும் படிப்பித்தற்கு பகுதி — நேர ஆசிரியர் ஒருவர் தேவை. வேதனம் அரசாங்க ஆசிரிய கலாசாலையில் பகுதி-நேர ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோலக் கொடுபடும்.

யாழ்ப்பாணம் சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலை முகாமைக்காரருக்கு விண்ணப்பஞ் செய்யவும்.

M 14 25, 29&2-5

**தேவை**

ஆங்கிலம் (S. S. C) உடன் தமிழில் பயிற்றப் பட்ட உதவி ஆசிரியர் தேவை. மனுச்செய்க.

மனேஜர் - மஸ்றஉத்தீன் பாடசாலை சோனகதெரு யாழ்ப்பாணம்.

M. 16 25—4—52.

### தானவரவு

சென்ற மாதம் 24 - ம் நாள் இவ்வுலக வாழ்வைநீத்த திரு. அ. வயித்திலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் சைவாசாரப்படி புதன்கிழமை (23—4—52) அன்று செய்யப்பெற்றன. இதன் பேரால் சைவபரிபாலனசபைக்குத் தானமாக அனுப்பிய ரூபா 5/= பெற்றும்.

திரு. வயித்திலிங்கம் அவர்கள் நீராவியடி உபதபால் நிலைய அதிபராகக் கடமைஆற்றியவர். அதற்கு முன் சைவப்பிரகாச யந்திரசாலையில் எழுத்தாளராகக் கடமைசெய்துள்ளார்.

வண்ணார்பண்ணை திரு. ஆரையப்பா அண்ணாமலை அவர்களின் புத்திரனாகிய இவர் சைவசீலராக வாழ்நாளைக் கழித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடி கிழக்கு சனசமூக நிலையம்

கைதடி கிழக்குச் சமசமூகநிலைய மூன்றும் வருட விழாவும் வருடாந்தக்கூட்டமும் சித்திரை மாதம் 6-ந் தேதி வெள்ளிக் கிழமை (18-4-52) மாலை 6-30 மணியளவில் திரு. வே. குமாரசுவாமி, B. A. Hons (Lond) அவர்களின் தலைமையில் ஆரம்பமாயது. பண்டிதர் திரு. P. M. ஞானப்பிரகாசம், பண்டிதர் திரு. N. S. முருகேசு, வித்துவான் திரு. E. மகாதேவா ஆசிரியர், திரு S.K.வேலாயுதபிள்ளை ஆசிரியர், திரு R. T. சுப்பிரமணியம் ஆகியோர் முறையே கிராமமும் இளைஞர்களும், சற்ருங்கொழுகு, இர்தக் குழந்தைகள், சமூகவாழ்வு, ஒற்றுமை என்னும் பொருள்களிற் பேசினர்கள்.

சங்கீதபூஷணம் திரு. S. செல்லத்துரை அவர்கள் முன்னேற்றம் சம்பந்தமான பாடல்களால் இசைவிருந்தளிதார். ஆசிரியர் பொ. அப்பையாவால் நன்றிகூறப்பட்டுப் புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டு இரவு 1மணியளவில் கூட்டம் இனிது முடிவெய்தியது.

## அம்பலவாண நாவலப் பெருந்தகையார்

3-ம் பக்கத் தொடர்ச்சி

டாது மூற்றுக்கையிட்டார். அதன் காரணமாகத் தமதூரில் சைவப் பாடசாலையொன்றைத் தாபித்து அதில் தாமும் ஒரு ஆசிரியராக இருந்து கடமையாற்றினர்.

### சந்நியாசம் பூண்டமை

அவர் இந்தியாவிலே பல இடங்களிலும் சைவப் பிரசங்கங்கள் செய்து சன்மானமும் பெற்ருர் பின் மதுரைக்குச் சென்று திருஞானசம்பந்தர் மடத்து மகாசந்நிதானத்திடம் மந்திரகாஷாயம்பெற்று நைட்டிகப் பிரமச்சரிய சந்நியாசம் பூண்டு சிலகாலம் அங்கே தங்கியிருந்தனர். பின் திருநெல்வேலிக்குச் சென்று அங்கே சம்பந்தசுவாமிபேரில் ஒரு மடம் கட்டுவித்து அதில் குருபூசை செய்யவும் அதற்கு ஏற்ற நிபந்தமும் ஏற்படுத்தியுள்ளார். இந்தியாவில் பல தலங்களுக்கு யாத்திரைசெய்தனர். திருவாவடுதுறைக்குச் சென்று அங்கே அம்பலவாணதேசிக

திரு. செ. கோவிந்தசாமி அவர்கள் எழுதயது

ரால் நாவலர் என்னும் பட்டமும் இடப் பெற்றுக் கொண்டார்கள். பின் சிதம்பரம் சென்று அங்கே தாம் நிலையாச் சீவிப்பதற்கு நாவலர் சந்தான ஞானசம்பந்த சுவாமியாதீனம் எனப் பெரிய மடாலயத்தை நிறுவினர். அதற்குப் பல நிபந்தங்களும் ஏற்படுத்தினர். அம் மடத்திலிருந்தே பல நூல்களையும் ஆக்கி அருளி வெளியிட்டார்கள்.

நாவலர் பெருமானின் பாதசேகரர் எனச் சிறப்புப் பெயர் பூண்ட இப் பெரியார் இயற்றிய நூல்களுள் அச்சேருத நூல்கள் பெரிய புராணபாடியம், சைவசந்நியாசபத்ததி, சித்தாந்தப்பிரபோதம், ஆரியதிராவிடப் பிரகாசிகை, என்பன. இந் நூல்கள் இன்றும் பெரியாரது கையெழுத்துப்பிரதியோடு இருக்கிறதாக அறியக்கிடக்கிறது. இந் நூல்களை சைவாபிமானிகள் சேர்ந்து வெளியிட்டால் சைவ உலகிற்கு பெரும் பயனளிப்பதாகும்.

மற்றென்று முன்னைநாள் துறவு பூண்டு பூரண சமாதிநிலையெய்திய எங்கள் யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாசமுனிவன் சிதம்பரத்தில் அடங்கிய சமாதிக்குப் பக்கத்திலேயே இப் பெரியாரது சமாதியும் இருக்கிறது. இதனையும் சைவமக்கள் சிதம்பர யாத்திரை செய்யும்காலத்தில் தரிசித்து நற்கதியடைவார்களாக!

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு, பொ. கா. தாமோதரம் பிள்ளை கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் கீழ் விபரிக்கப்படும் நகைகளை 10-5-52 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.'

| நம்பர் | உ | மூ | ஹூ | கொடுத்த ரூபா | ஊர் பெயர் நகை விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| 3517 | 8 | 1 | 51 | 26 | ஆவரங்கால் செல்லத்துரை கணபதிப் பிள்ளை இமி. கல. புரூச் | 1 |
| 3716 | 25 | 1 | 51 | 300 | சோனகதெரு அ. மு. சு. அப்துல்காதர் இமி. வெ. கல் பெண்டன் கோர்த்த சங்கிலி அட்டியல் | 1 |
| 3740 | 27 | 1 | 51 | 25 | திருநெல்வேலி சே. தா. சிதம்பரப் பிள்ளை, தாலி | 1 |
| 3743 | 28 | 1 | 51 | 45 | சுன்னாகம் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம், குண்டு வைத்த அரைப்பவுண் | 1 |
| 3782 | 1 | 2 | 51 | 200 | பிச்சைக்குளம் றோடு 23கிர். மு.மூகம்மது முகையதீன். பூ வேலை செய்த அரை டலர் | 1 |
| 3803 | 3 | 2 | 51 | 70 | கோண்டாவில் கிழக்கு செல்லப்பா செல்வரெத்தினம், சி. இல். மோதிரம் | 1 |
| 3904 | 13 | 2 | 51 | 320 | பெரியகடைத் தெரு A M S அப்துல் காதர், சவடி முகப்பு | 1 |
| 3938 | 17 | 2 | 51 | 30 | ஈச்சமட்டை செல்லையா குமாரசாமி இமி, சி. வெ. கல் தோடு சோடி | 1 |
| 4057 | 3 | 3 | 51 | 35 | இணுவில் கைலாயபிள்ளை அம்பலவாணர் குண்டு வைத்த அரைப்பவுண் | 1 |
| 4069 | 5 | 3 | 51 | 125 | வண்கிழக்கு சரவணமுத்துதுரைராசா சங்கிலி | 1 |
| 4234 | 29 | 3 | 51 | 235 | கன்னாதிட்டி பொன்னையா கந்தையா ரேடியோக் காப்பு சோடி | 1 |

வண்ணார்பண்ணை, 22-4-52

சி. பசுபதிச் செட்டியார்
வெந்தீஸ் மேஸ்தர்.

திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்

திறமான ருணிமார்க்ஓடுகள் 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

Std. 2 ஆஸ்பத்திரிறோட், யாழ்ப்பாணம்.

## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00

பிரதோஷவிரதமான்மியம் (புதிய பதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40

வில்லி பாரதம் - புட்ப யாத்திரைச் சருக்கம் பண்டிதர், ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருளவிளக்க விரிவுரை, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில நடக்கும் தமிழ்ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ, ) பரீட்சைகட்குப். பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரு 1—25ச

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள்சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகாநந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரு. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச.

ஈழமண்டல சதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் விலை ரு. 1.00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றுயுள்ளது. விலை ச 45.

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணு 10)

புலியூர் (யமக) அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது, ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50.

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, anJaff,

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE



நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
=0=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

## சாலாமிஸ்ரி லேகியம்

இதனுல் சூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீகாம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

### சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை

எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை,

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org